டர் நேரடியாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள் திருச்சி, தஞ்சாவூர் இரண்டிற்கும் ஒரே ஜாயின்ட் டைரக்டராக இருப்பதினால் இந்த மனுக்களை சீக்கிரம் பைசல் செய்ய முடிவதில்லை. வருடக் கணக்கில் ஆகிறது. ஆகவே ஜில்லாவிற்கு ஒரு அஸிஸ்டென்ட் டைரக்டர் போட்டு மனுக்களைப் பரிசீலனை செய்ய நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அங்கத்தினர் அவர்கள் சொல்வது புள்ளிவிவரத்திற்கு மாறாக இருக்கிறது. ஒரு வருடத்திற்குள்ளாக 90 லட்சம் ரூபாய் வரையில் கடன் கொடுத்து இன்னும் 12,000 மனுக்கள் பரிசீலனை செய்து, அங்கீகாரம் செய்து, இவ்வளவு துரிதமாக வேலைகள் நடந்துகொண்டிருக்கும்போது துரிதமாக நடக்கவில்லை என்றால் அப்படிச் சொல்வதைச் சர்க்காரால் ஏற்றுக்கொள்ள முடியாது.

Neighbourhood schemes in Tiruchirappalli

* 86 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the present stage of the proposal to acquire lands for the neighbourhood schemes near Tiruchirappalli town; and

(*b*) when the scheme is expected to be completed?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Out of the total extent of 496·14 acres required for the Tiruchirappalli Neighbourhood Project, draft notifications under section 4 (1) of the Land Acquisition Act has been approved by Government in respect of 207·93 acres of lands. In respect of other lands the acquisition proposals are under various stages with the District Officials.

(*b*) Acquisition of lands is expected to be completed in about six to eight months in the normal course. Full development of the area will take a few years after the acquisition is completed.

கடற்கரை எஸ்டேட், சென்னை

*** 87 கேள்வி.—திரு. மு. கருணாநிதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடற்கரை எஸ்டேட்டில் உள்ள வீடுகளுக்கான வாடகை எந்த அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது ?

(இ) அங்குள்ள வீடுகளின் வாடகைகளைக் குறைக்கும்படி மாநில வீட்டு வசதி போர்டாருக்கு அரசாங்கம் ஏதேனும் உத்திரவு பிறப்பித்துள்ளதா?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) A statement * is placed on the Table of the House.

---

* Printed as Appendix I on page 601.

23rd January 1965]

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்த வீடுகள் மீனவர்களுக்காக ஏற்கனவே கட்டப்பட்டதாகத் தெரிகிறது. மீனவர்களுக்குக் கொடுக்கிற சமயத்தில் 5 ரூபாய், 7 ரூபாய், 10 ரூபாய் என்று குறைவான வாடகையில்தான் அவர்களுக்கு அதனைக் கொடுத்திருந்தும் கூட அவர்கள் அங்கு குடியேறவில்லை. அப்படி அவர்கள் குடியேறாத காரணத்தினால்தான் அதை அரசாங்க சிப்பந்திகளுக்கு ஒதுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகவே இந்த அரசாங்க சிப்பந்திகளிடத்திலும் அதே வாடகையை வசூல் செய்ய ஏன் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கவில்லை? அப்படிச் செய்ய முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அங்கத்தினர் அவர்களுக்கு இது சம்பந்தமான விதிகளை விளக்கிச் சொல்ல விரும்புகிறேன். மீனவர்களுக்கு சேரி வாழ்பவர்களுக்கு மத்திய அரசாங்கத்திலிருந்து $37\frac{1}{2}$ சதவிகிதம் மான்யமாகவும், 25 சத விகிதம் கடனாகவும் உதவிகள் எல்லாம் கிடைக்கின்றன. அப்படி அவர்கள் உதவி கொடுத்து ராஜ்ய சர்க்காரிலிருந்தும் ஓரளவு உதவி கொடுத்து இப்படித்தான் 10 ரூபாய்க்குக் கொடுக்க முடியும். இல்லாவிட்டால் அந்தக் கட்டடங்கள் ஒவ்வொன்றுக்கும் 4,000, 5,000 ரூபாய் வரை செலவாகியிருக்கிறது. அப்படி 5,000 ரூபாய் வரை செலவாகும் வீட்டை 10 ரூபாய்க்கு யாராலும் கொடுக்க முடியாது. சேரி வாழ்பவர்கள், மீனவர்கள் போன்றவர்களைத் தவிர மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றால் எக்கனமிக் ரெண்ட்தான் கொடுக்க வேண்டும். ஏனெனில் அதற்கு மத்திய அரசாங்க மான்யம் கிடையாது. கடன்தான் உண்டு. கடனுக்கு வட்டி உண்டு.

விற்பனை வரி

*88 கேள்வி.— *திரு. செ. மாதவன் :* கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முடிய அதிகாரிகளால் கண்டு பிடிக்கப்பட்ட விற்பனை வரி மோசடிகளிலிருந்து அரசாங்கத்திற்குக் கிடைத்த அதிக வருமானம் எவ்வளவு?

THE HON. SRI R. VENKATARAMAN : The accounts recovered are under scrutiny and at this stage, the figures of additional revenue derived or that may be derived on account of the detection of evasion of tax could not be worked out.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : விற்பனை வரிக்குச் சரியான கணக்கு கொடுக்காமல் இருக்கிறவர்களை அதிகாரிகள் அடிக்கடி சென்று போய்ப் பிடித்தார்கள். இப்போது அது நின்று போய் இருப்பதற்குக் காரணம் என்ன? அவர்கள் பிடிக்கிறபோது இரண்டு மூன்று கோடி என்று வந்தது. பொறுப்பான அதிகாரத்தில் இருக்கிற அதிகாரிகளே சொல்கிறார்கள். அரசாங்கம் இன்னும் எவ்வளவு பணம் என்று கரக்டாக இல்லாவிட்டால் ரஃப்பாக இவ்வளவு கோடி அதிகமாகக் கிடைத்தது என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். அதிகாரிகள் ஸ்டேட்மென்ட் கொடுத்திருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் இங்கு சொல்வார்களா?